**OS No.118/2018**
DW 2- தனசேகரன்

நாள் 04.11.2025

**இடைநிலை மனு எண்கள் 7/2025, 8/2025 அனுமதிக்கப்பட்டு பி.வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விசயத்தை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். 3 இலக்க சொத்திற்கு பரிகாரம் கேட்டு வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார். 3 இலக்க சொத்தின் சர்வே எண் நான்குமால் தெரியுமா என்று கேட்டால் நான்குமால் தெரியாது சர்வே எண் தெரியும்.

சர்வே எண் 110/5, 110/7, 110/8 ஆகும். மேற்படி சர்வே எண்களுக்கு தனித்தனியாக விஸ்தீரண விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மொத்த விஸ்தீரணம் 70 செண்ட் இருக்கும். வாதிபோட்ட வழக்கிற்கு நான் தனியாக எந்த எதிருரையும் தாக்கல் செய்யவில்லை.

1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் தமதாக ஏற்றுக்கொண்டேன். ஏற்கனவே 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன விபரங்கள் கண்டு அதனுடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியமாக இருந்தது என்பது தெரியுமா என்று கேட்டால் தெரியும். அது லெட்சுமிஅம்மாள் பெயரில் இருந்தது. லெட்சுமிஅம்மாளின் வாரிசு தான் வாதி சிவராமன் என்றால் சரியல்ல. லெட்சுமிஅம்மாளின் வாரிசு தான் சிவராமன் நான் தெரிந்து கொண்டே தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சொத்து ஆதியில் லெட்சுமிஅம்மாள் பெயரில் இருந்து

அதன் பின்னர் யார் பெயரில் தாவா சொத்துக்கள் இருந்தது என்றால் நல்லதம்பியின் தகப்பனார் பெயரில் இருந்தது. மேற்படி நல்லதம்பியின் தகப்பனார் பெயர் எனக்குத் தெரியாது. லெட்சுமிஅம்மாளின் பெயரில் இருந்து நல்லதம்பியின் தகப்பனார் பெயரில் இருந்த ஆவணத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். அது பட்டா மற்றும் அனுபவ ரசீதுகள், வரி ரசீதுகள் ஆகும்.

மேற்படி ஆவணங்கள் எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்பது எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1, பி.வா.சா.ஆ 2 ஆவணங்கள் தான் நல்லதம்பியின்தகப்பனார் பெயரில் ஏற்பட்ட ஆவணங்கள் ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ஆவணம் தாவா சொத்திற்கு உரிய அனுபவ ரசீது ஆகும். அதில் சர்வே எண் 110/5, 110/7 ஆகிய இரண்டு மட்டும் காட்டப்பட்டுள்ளது.

பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் வட்டாட்சியரின் கையொப்பமோ, அவரது முத்திரையோ, அரசாங்க முத்திரையோ இல்லை என்றால் வருவாய் ஆய்வாளர் கையொப்பம் செய்துள்ளார். பி.வா.சா.ஆ 2 ஆவணம் 2003 ல் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணம் வழங்கப்பட்ட அலுவலரின் அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான்.

2003 ல் வழங்கப்பட்ட பி.வா.சா.ஆ 2 ஆவணத்திற்கு முந்தைய வருடத்திற்கோ அல்லது பிந்தைய வருடத்திற்கோ வரி ரசீது செலுத்தவில்லை, அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ 7 ஆவணமானது தாவா சொத்தை என் பெயரில் கிரயம் வாங்கியதற்கான ஆவணம் என்றால் சரிதான். யாரிடம் இருந்து கிரயம் வாங்கினேன் என்றால் இருளாயி என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினேன்.

இருளாயிக்கு இந்த சொத்து எப்படி பாத்தியம் என்று கேட்டால் அவர் பெயரில் பத்திரம் இருந்தது. இருளாயி யாரிடம் இருந்து

சொத்தை வாங்கினார் என்றால் நல்லதம்பி மற்றும் அவரது சகோதரரிடம் இருந்து வாங்கினார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 6 ஆவணம் தான் நல்லதம்பி வகையறாவினர் இருளாயிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் ஆகும்.

பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் எங்களுக்கு பூர்வீக பாத்தியமானது என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் தாவா சொத்து ஏற்கனவே லெட்சுமிஅம்மாள் பெயரில் இருந்து நல்லதம்பியின் தகப்பனார் பெயரில் மாறி அதன் பெயரில் அனுபவம் செய்து வந்து எழுதிக்கொடுக்கப்பட்டதாக எந்த ஒரு வாசகமும் இல்லை என்றால் சரிதான்.

தாவா சொத்துக்கள் சம்பந்தமாக லெட்சுமிஅம்மாள் பெயரில் இருந்துள்ள பட்டாவை ரத்து செய்வதற்கு வருவாய் துறையில் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது அதற்குண்டான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அதை பற்றி எனக்குத் தெரியாது.

தாவா சொத்துக்கள் ஆதீயில் லெட்சுமிஅம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டு அவர் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். அதன் பின்பு லெட்சுமிஅம்மாள் இறப்பிற்கு பின்பு அவரது வாரிசு சோமநாதன் தாவா சொத்துக்களை அடைந்து அவர் இறந்த பின்பு அவரது வாரிசான வாதி சிவராமன் பெயரில் பட்டா ஏற்பட்டு தாவா சொத்துக்களை நாளது தேதி வரை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்களுக்கு சம்பந்தம் இல்லாத நபர்கள் பெயரில் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு அவர்களிடமிருந்து தாவா சொத்தை நான் கிரயம் பெற்றதால் அந்த ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவாசொத்துக்களுக்கு தற்போது வரை சிவராமன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல.

நீங்கள் கிரயம் வாங்கியதன் பேரில் பட்டா மாறுதலுக்கு

மனு செய்து நடவடிக்கை மேற்கொண்டீர்களா என்று நடவடிக்கை மேற்கொண்டு என் பெயரில் பட்டா மாறுதல் உத்தரவு வழங்கப்பட்டுள்து. அந்த பட்டா மாறுதல் உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்கள் செட்டில்மெண்ட் காலத்திலும், யூ.டி.ஆர் காலத்திலும் நாளதுதேதியிலும் வாதி, வாதியின் வகையறாவின் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது என்றால் சரியல்ல. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ 1 ஆவணம் RIPT பட்டா என்றால் சரிதான். இந்த RIPT பட்டா செல்லது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

பி.வா.சா.ஆ 1 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது , இது சட்டப்படி செல்லுபடியாகக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 2017 ல் வாதி சிவராமன் பெயரில் பட்டா ஏற்பட்டது சட்டப்படி செல்லாது என எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதற்கு வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய வருவாய் துறை நடவடிக்கை மேற்கொண்டீர்களா என்றால் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்தேன். அந்த மனுவிற்கு அறிவிப்பு அனுப்பும் போது அந்த முகவரியில் வாதி சிவராமன் இல்லை என்று திருப்பப்பட்டது. அறிவிப்பை நான் தான் அனுப்பினேன்.

சிவகங்கை கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது தவறு என்றும் வாதி பெயரில் தான் இன்று வரையில் பட்டா உள்ளது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் இருந்ததை நான் இடைஞ்சல் செய்து ஆக்கிரமிப்பு செய்ததால் வாதியின் பவர் ஏஜென்ட் கண்ணன் என்பவர் என் மீது மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்தார் என்றால் சரியல்ல.

நான் காவல் துறையில் பணி செய்கிறேன். நான் சார்பு ஆய்வாளராக உள்ளேன். மானாமதுரை காவல் நிலையத்தில் உங்கள் மீது பதியப்பட்ட குற்ற வழக்கை Influence செய்து AD செய்து விட்டீர்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கோ, எனக்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கோ எந்த ஒரு உரிமையோ பாத்திய அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல. மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து வாதியை இடையூறு செய்து இந்த வழக்கில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற அனுமதியின் பேரில் மறுவிசாரணை</u>**

பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் சர்வே எண் 110/8 என குறிப்பிடப்பட்டு வெள்ளைச்சாமி கோன் பெயரில் உள்ளது.

**<u>மறு குறுக்கு விசாரணை அனுமதியின் பேரில்</u>**

சர்வே எண் 110/8 பிச்சுஅய்யர் மனைவி லெட்சுமிஅம்மாள் பெயரில் இருந்து வெள்ளைச்சாமி என்பவர் பெயரில் மாறியதாக உள்ளது எதன் அடிப்படையில் மாறியது என்ற குறிப்பு இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இந்த ஆவணம் 1995 ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் அரசாங்க முத்திரையோ, வட்டாட்சியர் கையொப்பமோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**-Sd-**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**-Sd-**

**District Munsif,**
**Manamadurai.**